G.C.E A/L



# Practical Geography



## MCQ 250 with Answers



Mr.A.Kajan B.A
077 2400 707

1. **7.5 km நீளமான பிரதான வீதியொன்று 1:50000 என்ற அளவுத்திட்ட இடவிளக்கவியல் படத்தில் என்ன அளவினால் காட்டப்படும்?**
15 Cm

2. **இலங்கையின் 1:50000 இடவிளக்கவியல் படங்களின் நெய்யரிக் குறிப்பு பெறுமானங்கள் ஆரம்பிப்பது.**
பேதுறுதாலகாலவிற்கு மேற்காக 200Km மற்றும் தெற்காக 200Km புள்ளியில்

3. **முதனிலைத்தரவுகளின் மூன்று பிரதான மூலாதாரங்களாகக் கொள்ளக்கூடியவை**
நேர்காணல், அவதானிப்பு, வினாக்கொத்து அளவீடு

4. **தொடர்ச்சியான தரவுகளுக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடிய மூன்று மாறிகளாவன.**
தாவரங்களின் வளர்ச்சி, நாளாந்த வெப்பநிலை, சிசுக்களின் நிறை

5. **இலங்கையில் குறிப்பிட்டதொரு வருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கையைக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான இரண்டு படவரைகலையியல் முறைகளாவன.**
கூட்டுபார், பிரிக்கப்பட்ட வட்டங்கள்

6. **இடைக்காலணை வீச்சு என்பதன் சரியான கருத்து.**
மேற்காலணைக்கும் $(Q_3)$, கீழ்க்காலணைக்கும் $(Q_1)$ இடையிலான வேறுபாடு

7. **சராசரிப் பெறுமானத்தை அளவிடுவதற்கான $\sum fx$ எனும் சமன்பாட்டில் $fx$ என்பது.**
ஒவ்வொரு வகுப்பினதும் நடுப்பெறுமானத்தை அவற்றின் மீடிறன் பெறுமானங்களினால் பெருக்கி வரும் பெறுமானங்கள் ஒவ்வொன்றினதும் கூட்டுத்தொகை.

8. **புவியியல் தகவல் ஒழுங்கொன்றின் பிரதான கூறுகள் யாவை?**
* தரவு (Data)
* கணனி முறைமை (Computer System)
* வன்பொருள் (Hardware)
* மென்பொருள் (Software)
* பயனிகள் (Users)

9. **ஓர் இடத்தின் உண்மையான அமைவிடத்தைத் கண்டறிய உதவும் நுட்பமுறை.**
பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS)

10. **இடவிளக்கப் படத்தாள் ஒன்றில் காட்டப்படும் நிலப் பகுதியின் பரப்பளவு.**
1000 $Km^2$

11. **இலங்கையின் மொத்த நிலப்பகுதியை 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் எத்தனை மெட்ரிக் படத்தாள்களாகப் (Sheets) பிரிக்கப்பட்டுள்ளன?**
92

12. **1:50000 என்ற அளவுத்திட்ட இடவிளக்கவியல் படங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ள எறியம்.**
குறுக்குக்கோட்டு மேற்கற்றோ எறியம்

Akajan A.Kajan A.Kajan

**13.** **1:50000 என்ற அளவுத்திட்ட இடவிளக்கப் படத்தில் ஒவ்வொரு படத்தாள்களிலும் தேசிய ஆள்கூறுகள் எத்தனை கிலோ மீற்றர் இடைவெளியில் குறிக்கப்பட்டுள்ளன?**
5Km

**14.** **கூட்டமாக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி சராசரியைப் பெற்றுக்கொள்ள பயன்படும் சூத்திரம்.**

$$\overline{x} = \frac{\sum fx}{n}$$

**15.** **25 எண்ணிக்கையைக் கொண்ட தரவு ஒழுங்கொன்றின் இடையம்.**
13ஆவது எண்ணிக்கையின் பெறுமானம்

**16.** **புவியியல் தகவல் முறைமைத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அமைக்கப்படும் படத்தின் வகை.**
எண்ணிலக்கப் படங்கள்

**17.** **GPS ஐ பயன்படுத்தி அமைக்கப்படும் படமொன்றின் தனித்துவமான அம்சம்**
இடவிளக்கவியல் அம்சங்களின் உண்மையான அமைவிடத்தை துல்லியமாகக் காட்டும்.

**18.** **முதனிலைத் தரவு சேகரிக்கும் மூன்று முறைகளைக் குறிப்பிடுக.**

* வினாக்கொத்து
* கலந்துரையாடல்
* அவதானிப்பு

**19.** **மையநிலைப் போக்கின் முதனிலை அளவீடான ஆகாரம் (Mode) என்பது.**
தரவுப் பரம்பலொன்றின் அதிக தடவை காணப்படும் மீடிறன் பெறுமானம்.

**20.** **தரவுப் பரம்பலொன்றின் பிரிக்கை அளவீடுகளாவன.**

* வீச்சு
* காலணை
* இடைக்காலணை வீச்சு
* சராசரி விலகல்
* நியம விலகல்

**21.** **புவியியல் தகவல் முறைமையின் நுட்பங்களைப் பயன்படுத்தி அமைக்கப்படும் இறுதிப் படத்திலுள்ள அடிப்படை மூலங்களாவன.**
சட்டகம் தலைப்பு, திசை, அளவுத்திட்டம், குறிவிளக்கம்


**22.** **RS நுட்பத்தின் மூலம் தரவுக் சேகரிக்கும் முறைகள்.**
விமான ஒளிப்படங்கள், செய்மதித் தொழில்நுட்பம், மேடைத் தொழில்நுட்பம்

**23.** **புவியியல் தகவல் முறைமையின் பிரதான தொழிற்பாடுகளை அவற்றின் வரிசை முறையொழுங்கில் குறிப்பிடுக.**
தகவல்களைப் பெறுதல், தேக்கிவைத்தல், இற்றைப்படுத்தல், கையாளுதல், பகுப்பாய்வு செய்தல், காட்சிப்படுத்தல்.

**24.** **படங்களின் பிரதான இரு வகைகளும் எவை?**

* இடவிளக்கப் படங்கள் **(Topographic Maps)**
* கருப்பொருள் படங்கள் **(Thematic Maps)**

A.Kajan A.Kajan A.Kajan



MCQ 250 Practical Geography A/L

**25. பௌதிக, பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய தேசப்பட வகை.**
நிலப்பயன்பாட்டு தேசப்படம்

**26. படவரைகலையியலில் பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று புதிய நுட்ப முறைகளும் எவை?**
* புவியியல் தகவல் முறைமை **(GIS)**
* பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை **(GPS)**
* தொலையுணர்வுத் தொழிநுட்பம் **(RS)**

**27. கணனிகளைப் பயன்படுத்தி படம் அமைப்பதற்கான தரவு மூலாதாரங்களாவன.**
விமான ஒளிப்படங்கள், செய்மதிப் படங்கள், **GPS** படங்கள்

**28. "வெளியிலிருந்து பார்க்கும் போது தூரத்தில் பூமியில் வரையப்பட்டது போன்ற ஒரு சித்திரமே தேசப்படம் ஆகும்" – என்ற கூற்றுடன் தொடர்புடையவர்.**
அர்வின் ரோஸ்

**29. தேசப்படத்தின் அடிப்படை இயல்புகளில், பட முகப்பிற்கு வெளியே இருக்கக்கூடிய தகவல்களாக அமைவன.**
அளவுத்திட்டம், தலைப்பு, திசை, மூலம்

**30. 1:50000 இடவிளக்கவியல் படமொன்றின் முகப்பிலுள்ள தகவல்களாவன.**
* பௌதிக அம்சங்கள்
* பண்பாட்டு அம்சங்கள்

**31. 1:50000 இடவிளக்கவியல் படமொன்றில் வெளிஎல்லையின் மேல் ஓரத்தில் காணப்படும் தகவல்களாவன.**
* படத்தின் வகை
* படத்தின் பெயர்
* படத்தின் இலக்கம்


**32. 1:50000 இடவிளக்கவியல் படமொன்றின் வெளி எல்லையின் கீழ் ஓரத்தில் காணப்படும் தகவல்களாவன.**
* அளவுத்திட்டம்
* திசை
* அருகிலுள்ள படங்களைக் காட்டும் வரைபடம்
* நிர்வாக எல்லைகளைக் காட்டும் வரைபடம்
* குறியீட்டு விளக்கம்

**33. இலங்கையின் இன, மத ரீதியான தகவல்களைக் காட்டுவதற்கு பொருத்தமான வரைபடம்.**
எளிய பிரிக்கப்பட்ட வட்டம்

**34. 1:50000 என்ற இலங்கையின் தேசப்படங்கள் 92 துணைப்பிரிவுகளைக் கொண்டது. இதில் ஒரு பிரிவின் நீள, அகலங்கள் முறையே.**
**40Km, 25 Km / 80Cm, 50Cm**

**35. 'பச்சைத் தரவுகள்' என்பது.**
ஒழுங்குபடுத்தப்படாத தரவுகள்

A.Kajan A.Kajan A.Kajan



36. கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பலொன்றின் வரைபியலைப் பிரதிபலித்துக்காட்டப் பயன்படுத்தக்கூடிய வரைபு.
இழைவரையம்

37. ஒழுங்குபடுத்திய தரவுத் தொகுதியொன்றின் கூடிய பெறுமானம் 50%, குறைந்த பெறுமானம் 50% என வேறுபடுத்திக்காட்டும் அளவீட்டு முறை.
இடையம்

38. தேசப்படத்தின் தந்தையாகக் கருதப்படுபவர்.
அனெக்சிமெண்டர்

39. இலங்கையின் மெட்ரிக் தேசப்படம் என்பது.
சாதாரண தேசப்படம்

40. 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த மெட்ரிக் படமொன்றில் 9Km$^2$ பரப்புடைய பகுதி ஒன்றினை 1:25000 என்ற அளவுத்திட்டத்தில் வரையும் போது அமைய வேண்டிய அளவு.
**12Cm X 12Cm**

41. ஆராய்வதற்கு அல்லது பகுப்பாய்வு செய்வதற்காக சேகரிக்கப்பட்ட விபரங்களும் புள்ளிவிபரங்களினதும் தொகுப்பு.
தரவு

42. 1:50000 இடவிளக்கப்படங்களில் அகல நெடுங்கோட்டுப் பெறுமானங்கள் எவ்வளவு இடைவெளியில் அமைக்கப்படும்?
**5'**

43. கருப்பொருள் தேசப்படத்திற்கு உதாரணமாகக் கொள்ளப்படக்கூடியவை.
* நிலப்பயன்பாட்டுத் தேசப்படம்
* சனத்தொகைப் பரம்பல் படம்
* அரசியல் பிரிவுப் படம்

44. வாகனங்களின் நகர்வு, இடப்பெயர்வு, நீரோட்ட அசைவு, என்பவற்றைக் காட்டுவதற்கு மிகவும் உகந்த படவரைகலை நுட்பமுறை.
பாய்ச்சல்கோட்டுப் படம் / பாய்ச்சல் படம்

45. விமானம், கப்பல், தரை வாகனங்களுக்கு அண்மைக்காலங்களில் வழிகாட்டுவதற்கு பயன்படுத்தப்படும் முறைமை.
**GPS**

46. உலகின் மிகப் புராதனமான தேசப்படமான மொசப்பத்தேமிய நகரத்திட்டப் படத்தின் காலம்.
**5000** வருடங்களுக்கு முன்

47. ஏறுவரிசைப்படுத்தப்பட்ட 42 எண்கள் உள்ள தரவுப் பரம்பலொன்றில் கீழ்க்காலனை காட்டப்படுவது.
முறையே **10**ஆம் தானத்திலும், **11**ஆம் தானத்திலும் இருக்கும் எண்களுக்கு இடையில்

48. புவியின் யாதேனுதேனுமொரு இடத்தின் அமைவிடத்தை தனி அமைவாகவும், சார்பமைவாகவும் இனங்காணக்கூடிய வரைபடங்கள்.
இடவிளக்கவியற் படங்கள்

A.Kajan A.Kajan

Practical Geography mcQ 250 A/L

**49.** **GPS முறைமையானது ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு.**
1973

**50.** **ஒரு நாட்டின் சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பைக் காட்ட பொருத்தமான வரைபடம்.**
பிரமிட் வரைபடம்

**51.** **கணனி மூலம் குறுகிய காலத்திற்குள் சரியான புவியின் தகவல்களை ஒப்பிடுதல், பகுப்பாய்வு செய்தல் என்பவற்றுக்கு பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பம்.**
GIS

**52.** **காலணி தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் காலணிகள் உற்பத்தி செய்வதற்கான அளவினை அறிந்துகொள்வதற்கு மிகவும் பொருத்தமான கணிப்பீடாக அமைவது.**
ஆகாரம் / வகை

**53.** **ஒரு நாட்டின் மழைவீழ்ச்சிப் பரம்பல், வெப்பநிலைப் பரம்பல், அமுக்கப்பரம்பல் போன்றவற்றைக் காட்டுவதற்கு மிகவும் உகந்த படவரைகலை நுட்பம்.**
சமகணியப்படம்

**54.** $\acute{O} = \sqrt{\frac{\sum(x - x)^2}{n}}$ **எனும் சூத்திரத்தில் '$\acute{O}$' குறிப்பது**
நியம விலகல்

**55.** **உலகின் மிகவும் பழமையான தேசப்படமாக அமைவது.**
மொசப்பத்தேமிய களிமண்தட்டுப் படம்

**56.** **ஓரங்குலத் தேசப்படங்களில் (1:63360) பயன்படுத்தப்படும் அடிப்படையான அளவீடுகள்.**
அங்குலம், அடி, மைல்

**57.** **விமான ஒளிப்படங்களின் அளவுத்திட்டமாக அமைவது.**
1:40000

**58.** 23, 20, 31, 19, 20, 40, 23, 35, 19
**மேற்படி தரவுத்தொகுதியில் காணப்படுகின்ற ஆகார வகை.**
பல்லாகாரம்

**59.** **வரைபு ஒன்றினால் திரட்டு மீடிறனின் பரம்பலைக் காட்டுவது.**
திரள்மீடிறன் வளையி

**60.** **GPS மூலம் தற்காலத்தில் பெறப்படும் பிரதான விடயம்.**
தரைத்தோற்ற வேறுபாடுகள்

**61.** **உண்மை வடக்கிற்கும், அளியடைப்பு வடக்கிற்கும் இடையிலான கோண வேறுபாடு**
$3^o$

**62.** **இரண்டாம்நிலைத் தரவு மூலாதாரங்களாக அமைவன.**
மத்தியவங்கி ஆண்டறிக்கை, திணைக்களப் பதிவு


A.Kajan A.Kajan A.Kajan






63. **1. அரசியல் பிரிவுகளைக் காட்டும் படம்**
**2. மாகாணத் தேசப்படங்கள்**
**3. வலயத் தேசப்படங்கள்**
**4. மாவட்டத் தேசப்படங்கள்**
**மேலே கூறிய தேசப்படங்களை உள்ளடக்கும் வகை.**
நிர்வாகத்தேசப்படம்

64. **1:50000 எனும் அளவுத்திட்டத்தில் அருகிலுள்ள படத்தின் உண்மையான பரப்பளவு யாது?**
$45Km^2$




65. **ஒழுங்குபடுத்தப்பட்ட தரவுத் தொகுதியொன்றில் ஒற்றையிலக்க எண்ணிக்கையைக் கொண்டிருப்பின் நடுப்பெறுமானமாகவும், இரட்டை இலக்க எண்ணிக்கையைக் கொண்டிருப்பின் மத்தியில் வருகின்ற இரு பெறுமானங்களையும் கூட்டி, இரண்டால் வகுப்பதன் மூலமும் பெறப்படுவது.**
இடையம்

66. **கட்புலக் காட்சி ஊடகத்தினூடாக தரவுகளை எடுத்துக்காட்டும்போது, கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?**
* வரைபின் துல்லியத் தன்மை
* பூரணத்துவமான தன்மை
* கவர்ச்சித் தன்மை
* தெளிவுத் தன்மை

67.



**மேலே தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டிருப்பது.**
**1:50000** எனும் அளவுத்திட்டத்திற்கான நேர்கோட்டு அளவுத்திட்டம்

68. **அளவுத்திட்டம் என்றால் என்ன?**
குறித்தவொரு பிரதேசத்தின் உண்மையான நிலப்பரப்பில் குறித்த இரு புள்ளிகளுக்கிடையிலான தூரத்திற்கும், அப் பிரதேசத்தைக் காட்டும் உரு படத்தில் குறித்த அதே புள்ளிகளுக்கு இடையிலான தூரத்திற்கும் உள்ள விகிதாசாரத் தொடர்பு.

69. **தரவுப் பரம்பலொன்றின் உயர்வு, இழிவுப் பெறுமானங்களுக்கிடையிலான வேறுபாடு அழைக்கப்படுவது.**
வீச்சு

70. **தரவுகளின் மொத்தக் கூட்டுத்தொகையினை தரவுகளின் எண்ணிக்கையால் பிரிக்க வருவது.**
இடை

71. **45 பெறுமானங்களைக் கொண்ட தரவு ஒழுங்கொன்றில் இடையம் அமைவது.**
**23**வது இடத்தில் அமைந்துள்ள பெறுமானம்

72. **இரண்டாம்நிலைத் தரவு மூலாதாரங்களாக அமைவன.**
மத்தியவங்கி ஆண்டறிக்கை, திணைக்களப் பதிவு

73. $\bar{X} = \frac{\sum x}{n}$ **எனும் சூத்திரத்தில்** $\sum x$ **என்பது.**
தரவுகளின் கூட்டுத்தொகை

A.Kajan A.Kajan

74. **மெட்ரிக் இடவிளக்கவியல் படங்களில் 1:50000 எனும் அளவுத்திட்டத்தில் 10Km நீளத்தைக் காட்டுவதற்கு எத்தனை சென்ரி மீற்றர்கள் தேவை?**
**20Cm**


75. **தரவு சேகரித்தலின் போது மிகவும் தேர்ச்சியான ஆய்வாளரின் மூலம் தீர்மானிக்கப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களை மாதிரியாக தெரிவுசெய்தலானது அழைக்கப்படுவது.**
தீர்மானிக்கப்பட்ட மாதிரியெடுப்பு

76. **புள்ளிவிபரவியலில் 10, 20, 30…………90 என அமைவது.**
தசமானை

77. **RS மூலம் விமானத்திலிருந்து நிலத்தை படமாக்கும் முறை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.**
**1909**

78. **மையப்போக்கு அளவீட்டு முறைகளில் மிகவும் பயனுடைய அளவீட்டு முறை.**
இடை

79. **புள்ளிவிபரவியலில் A, B, C, D எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள இணைவுத் தொடர்புகளின் சரியான ஒழுங்கு.**




நேர் இணைவு, எதிர் இணைவு, தொடர்பற்றது, பூச்சிய இணைவு

80. **இலங்கையின் மாவட்ட குடிப்பரம்பல், மாவட்டங்களுக்கு இடையிலான குடிப்பெயர்வு என்பவற்றைக் காட்டக்கூடிய வரைபடத் தொகுதி.**
* புள்ளிப்படம் * பாய்ச்சற் படம்

81. **ஏக்கருக்கான விளைச்சல், தலா சதுர கிலோ மீற்றருக்கு விலங்குகளின் அடர்த்தி போன்ற தரவுகளைக் காட்ட உதவும் படம்.**
இடக்கணியப் படம்


82. **இடைச் செருகலை மேற்கொள்ளக்கூடிய படவரைகலை முறைமை.**
புவியியல் தகவல் முறைமை

83. **முதலாவதாக செய்மதியை விண்ணுக்கு ஏவிய தென்னாசிய நாடு.**
இந்தியா

84. **புள்ளிவிபரவியலில் பல்வேறு குழுக்களாக வகைப்படுத்தப்படும் குடி ஒன்றுக்குப் பொருத்தமான மாதிரி எடுப்பு முறை.**
படைகொண்ட மாதிரி / கொத்து மாதிரி

85. **இலங்கை தனது முதலாவது செய்மதியை விண்ணுக்கு ஏவியதன் மூலம் தென்னாசியாவில் எத்தனையாவது செய்மதித்தொழில்நுட்பம் கொண்ட நாடாக விளங்குகின்றது?**
**3**ஆவது நாடு

A.Kajan A.Kajan A.Kajan





86. **புவியியலில் பயன்படுத்தப்படும் தரவுகளின் முனைப்பான பண்பாக கருதக்கூடியது.**
இடம்சார், காலம்சார் பரம்பலைக் காட்டுதல்

87. **புதிய படவரைகலை நுட்பங்களில் படமாக்கல், பகுப்பாய்வு செய்தல் செயன்முறைகளை வெளிப்படுத்தும் நுட்பங்கள் முறையே.**
**RS, GIS**

88. **புவியியல் தகவல் தொழில்நுட்பம் (GIS) மூலம் படமாக்குவதற்கு பயன்படுத்தும் எறியம்.**
**U.T.M எறியம்**

89. **ஒரு தரவுத் தொகுதியில் மீடிறன் வளையி செவ்வனாக ($90^0$) அமையும் போது இடை, இடையம், வகை என்பன அமைவது.**
வளையியின் மத்தியில்

90. **இலங்கையின் மெட்ரிக் படங்களை அமைக்க உதவியாக அமைந்த செய்மதி.**
**Land sat**

91. **மொத்தக் குடித்தொகை அதிகமாக உள்ளபோது ஒரு ஆய்வுப் பிரதேசத்தில் தகவல் சேகரிக்கப் பொருத்தமான முறை.**
மாதிரியெடுப்பு முறை

92. **ஒரு வகையினையும், பல்வேறு வகுப்பினையும் கொண்ட புள்ளிவிபரத் தரவுத்தொகுதியினை படமாக்கப் பொருத்தமான நுட்ப முறை.**
பல்பார் வரைபடம்

93. **மத்தியகோட்டினை அண்மித்த பகுதியில் GPS செய்மதி சுற்றும் திசை.**
மேற்கு – கிழக்கு

94. **உலக நாடுகளின் அமைவிடங்களை துல்லியமாக இனங்காட்டக்கூடிய முறைமை.**
பூகோள அமைவிட முறைமை **(GPS)**

95. **இலங்கை முழுவதையும் உள்ளடக்கும் வகையில் 1:63360 எனும் அளவுத்திட்டத்தில் எத்தனை இடவிளக்கவியல் தாள்கள் உள்ளன?**
**72**

96. **புவியியல் தகவல் முறைமைக்கு (GIS) தேவையான நவீன தரவுகளை பெறும் முறை.**
புவிசார் இடமறிதல் முறைமை **(GPS),** தொலையுணர்வுத் தொழில்நுட்பம் **(RS)**

97. **தாளில் படங்களை அச்சுப்பதிக்க உதவும் கருவிகள்.**
திசைகாட்டி, தியோடரலைற், சங்கிலி மற்றும் நாடா

98. **தரவுத் தொகுதியொன்றினை ஏறுவரிசைப்படுத்திய பின்னர் 75% ற்கு அப்பாலுள்ள காலணை பெறுமானம் அழைக்கப்படுவது.**
மேற்காலணை

99. **புவியியல் தகவல் ஒழுங்கு முறையொன்றில் (GIS) இடம்சார் தரவுகள் இன்றியமையாதது எனக் குறிப்பிட்ட புவியியல் அறிஞர் யார்?**
டொனால்ட் டெய்லர் **(Donald Deilar)**

A.Kajan A.Kajan A.Kajan



100. **இலங்கையின் இடரீதியான கரையோர மீன்பிடியைக் காட்ட பொருத்தமான வரைபட முறைமை.**
இடரீதியான விகிதாசார வட்டம்

101. **1:25000 என்ற அளவுத்திட்டத்தின்படி படப் பிரதேசத்தில் 1Cm தூரத்தைக் குறிப்பது.**
**1Cm = ¼ Km**

102. **புள்ளிவிபரவியலில் பயிர் விளைவிற்கும் உரப்பாவனைக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் இணைவுக் குணகம்.**
நேர்இணைவு

103. **புவியியல் தகவல் முறைமை என்பதன் ஆங்கில விரிவாக்கம் யாது?**
**Geography Information System**

104. **உலகில் முதன் முதலாக GIS தொழில்நுட்பத்தை அமைத்த நாடு, அமைப்பு என்பன யாவை?**
கனடா
காடு மற்றும் கிராம அபிவிருத்தித் திணைக்களம்

105. **GIS நுட்பத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய அறிஞர் யார்?**
கலாநிதி றொகர் தொம்லிம்சன்

106. **1987இல் ESRI நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட மென்பொருள் எது?**
**Arc Info**

107. **சர்வதேச GIS தினம் கொண்டாடப்படுவது.**
ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை

108. **முதன் முதலாக GIS தினம் கொண்டாடப்பட்ட ஆண்டு, அறிமுகம் செய்த நிறுவனம் என்பன யாவை?**
* **1999**
* **ESRI**

109. **GIS மென்பொருள் உற்பத்தியில் சர்வதேச ரீதியாக முன்னணி வகிக்கும் நிறுவனம் எது?**
**ESRI**

110. **GIS இன் இடம்சார்ந்த தரவுகளின் பிரதான வகைகள் யாவை?**
* காவித்தரவு / வெக்டர் மாதிரி **(Vector Data)**
* நெய்யரித் தரவு / இராஸ்டர் மாதிரி **(Raster Data)**

111. **புள்ளிகள், கோடுகள், மூடிய உருக்களாக காணப்படும் தரவுகளை அழைப்பது.**
வெக்ரர் **(Vector)** மாதிரி / காவித்தரவு

112. **செய்மதி விம்பங்கள், தரைத்தோற்ற வரைபடங்கள் என்பவற்றிலிருந்து ஸ்கான் (Scan) செய்யப்பட்ட படங்களை அழைப்பது.**
இராஸ்டர் **(Raster)** மாதிரி / நெய்யரித் தரவு

113. **GIS இல் தரவுகள் உட்செலுத்தமுன்னர் (Input) அது எவ்வாறு மாற்றப்பட வேண்டும்?**
எண்மானம் **(Digital)**

A.Kajan A.Kajan



**114. இடவிளக்கப் படமொன்றை கணனிக்குள் மாற்றுகின்ற செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?**
டிஜிடைசிங் **(Digitizing)**

**115. இலங்கையின் 1:50000 இடவிளக்கப்படத் தாள்களில் இணைத்து வரையப்படாது, சிறிய நிலப் பகுதியைத் தனிப் படத்தாள்களாக வரையப்பட்டுள்ள படப் பகுதிகள்.**
* அம்பாறை - கல்முனை
* திருக்கோவில் - தம்பட்டி
* பொத்துவில் - கோமாரி
* அம்பலாங்கொட - பலப்பிட்டிய

**116. GPS என்பதன் ஆங்கில விரிவாக்கம் யாது?**
**Global Positioning System**

**117. GPS இன் மறுபெயர்கள் யாவை?**
* உலக நிலைகாண் தொகுதி
* புவி இடங்காட்டித் தொகுதி
* பூகோள இடநிர்ணய முறைமை
* பூகோள நிலையறி முறைமை

**118. GPS ஐ முதன் முதலாக பயன்படுத்திய நாடு எது?**
ஐக்கிய அமெரிக்கா

**119. GPS முறைமையானது முதன்முதலாக எந்த அமைப்பினால் அறிமுகப்பட்டதாகும்?**
ஐக்கிய அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம்

**120. GPS இன் கூறுகள் யாவை?**
* விண்வெளிப்பகுதி
* பயனாளர் பகுதி
* கட்டுப்பாட்டுப் பகுதி

**121. GPS முறைமை உலகில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு யாது?**
**1973**

**122. GPS முறைமையானது மக்கள் பாவனைக்காக விடப்பட்ட ஆண்டு யாது?**
**1980**

**123. GPS தொழில்நுட்பம் பிரதானமாக எதனுடன் இணைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது?**
செய்மதி **(Satellite)**

**124. GPS தகவல் பரிமாற்றத்திற்காக விண்ணில் காணப்படும் செய்மதிகளின் மொத்த எண்ணிக்கை யாது?**
**31**

**125. GPS தகவல் பரிமாற்றத்திற்காக பயன்படுத்தப்படும் செய்மதிகளின் எண்ணிக்கை யாது?**
**24**

A.Kajan A.Kajan A.Kajan

126. விண்வெளியில் காணப்படும் GPS இன் சுற்றுவட்டப் பாதைகளின் எண்ணிக்கை யாது?
06

127. ஒரு GPS சுற்றுவட்டப்பாதையில் இயங்கக்கூடிய செய்மதிகளின் எண்ணிக்கை யாது?
04

128. தரையில் உள்ள ஒரு இடத்தை துல்லியமாக இனங்கண்டுகொள்ள பயன்டுத்தவேண்டிய ஆகக்கூடிய செய்மதிகளின் எண்ணிக்கை யாது?
04

129. முதலாவது GPS செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்ட ஆண்டு யாது?
1978

130. 24 செய்மதிகளைக் கொண்ட ஒரு முழுமையான செய்மதி சுற்றுவட்டத்தொகுதி விண்ணில் கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டு யாது?
1994

131. செய்மதி ஒன்றினது சராசரி ஆயுட்காலமாக கருதப்படுவது எத்தனை ஆண்டுகளாகும்?
10 ஆண்டுகள்

132. GPS Satellite களை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் அமைப்பு எது?
ஐக்கிய அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம்

133. குறித்தவொரு GPS செய்மதியானது நாளொன்றுக்கு புவியை வலம்வரும் தடவைகள் எத்தனை?
02 தடவைகள்

134. GPS செய்மதியொன்றின் சராசரி வேகமாகக் கொள்ளப்படுவது.
700 மைல்/h

135. செய்மதிகளின் இயக்கத்திற்கான பிரதான சக்திமுதல் எது?
சூரியன்


136. GPS Satellite மூலம் பெறப்படும் தகவல்களை தரைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்வாங்கிக்கொள்ளும் சாதனம் எது?
GPS Receiver

137. GPS செய்மதிகளின் பயணப்பாதை எந்தெந்தத் திசைகளை அடிப்படையாகக் கொண்டது?
வடக்கு – தெற்குத் திசைகள்

138. இருபரிமாண நிலையில் குறித்தவொரு அமைவிடத்தை அறிந்துகொள்ள தேவையான ஆகக்குறைந்த செய்மதிகளின் எண்ணிக்கை யாது?
03

139. GPS இனால் வெளியிடப்படும் பிரதான இரு தாழ்சக்கி வானொலி அலைகளும் எவை?
$L_1$, $L_2$

A.Kajan A.Kajan A.Kajan



140. முகில்கள், கண்ணாடி, பிளாஸ்ரிக் என்பவற்றை ஊடறுத்துச் செல்லும் இயல்புடைய GPS சைகை எது?
$L_1$

141. பொதுமக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ள GPS சைகை எது?
$L_1$

142. ஐக்கிய அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இராணுவத்துறை அத்துடன் அனுமதி பெற்ற சில துறைகளும் மாத்திரம் பயன்படுத்தும் GPS சைகை எது?
$L_2$

143. RS என்பதன் ஆங்கில விரிவாக்கம் யாது?
Remote Sensing

144. தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படும் பிரதான இரு சாதனங்களும் எவை?
* உணரி (Sensor)
* புகைப்படக்கருவி (Camera)

145. வான்வெளி புகைப்படம் எடுக்கும் முறை முதன்முதலாக பலூன்மூலம் முன்னெடுக்கப்பட்ட ஆண்டு எது?
1958

146. தொலையுணர்வின் கூறுகள் யாவை?
* சூரியன்
* இலக்கு
* செய்மதி
* மேற்பரப்பு நிலையம்
* செய்மதித் தரவு
* பகுப்பாய்வும் விளக்கமளித்தலும்
* தரவுப் பகுப்பாய்வும் வடிவமைத்தலும்


147. மின்காந்த அலைநீளங்களின் அடிப்படையில் RS ஐ வகைப்படுத்துக.
* ஒளியியல் தொலையுணர்வு
* வெப்பத் தொலையுணர்வு
* நுண்ணலை தொலையுணர்வு

148. தளமேடை அடிப்படையில் தொலையுணர்வை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
* வான் தொலையுணர்வு (Aerial Rs)
* செய்மதித் தொலையுணர்வு (Satellite Rs)

149. GPS செய்மதிகள் வான்வெளியில் ஏறத்தாள எத்தனை கிலோமீற்றர்கள் தொலைவில் நிலைநிறுத்தப்படும்?
22200Km

150. 1972இல் Landsat – 1 என்ற செய்மதியை விண்ணுக்கு அனுப்பிய நாடு எது?
ஐக்கிய அமெரிக்கா

A.Kajan A.Kajan A.Kajan



151. உளவு தொலையுணர்வு செய்மதித் தொழில்நுட்பத்தை (Spy Satellite Remote Sensing) கொண்டுள்ள நாடுகள் யாவை?
* ஐக்கிய அமெரிக்கா
* இஸ்ரேல்
* இந்தியா

152. தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தில் பயன்படும் செய்மதிகள் யாவை?
* **TRIOS**
* **Series**
* **NOAA**
* **LANDSA**
* **SPOT**
* **MOS**
* **GEO – EYEN**
* **JERS**
* **ENVISAT**
* **CRYOSAT**
* **ORBVIEW – 2**
* **RADARSAT**
* **IKONOS**

153. இலங்கையில் GPS போக்குவரத்து வழிகாட்டல் முறைமை (GPS Navigation System)ஐ வழங்கிவரும் நிறுவனம் எது?
**Fala Prosat**

154. 'CAC' என்பதன் விரிவாக்கம் யாது?
**Computer Assortment Cartography**

155. 'CAC' என்றால் என்ன?
**GIS** இன் பயன்பாடு வருவதற்கு முன்னர் கணனி மூலம்பமாக்குவதற்கு பணன்பட்ட முறைமை

156. விமான ஒளிப்படங்களின் எடுக்கப்படும் படங்களின் கோணத்தின் அடிப்படையிலான வகைப்பாடு.
* செங்குத்தான விமான ஒளிப்படம்
* சாய்வான விமான ஒளிப்படம்

157. இலங்கை முழுவதற்குமான விமான ஒளிப்படங்கள் முதன்முதலாக எடுக்கப்பட்ட ஆண்டு எது?
**1956**

158. இலங்கையில் விமானப்படங்களை எடுப்பதற்கு உதவிய அமைப்புக்கள், நாடுகள் எவை?
* கொழும்புத்திட்டம்
* கனடா – புகைப்பட ஆய்வு மையம்
* ஐக்கிய அமெரிக்கா – பிஜ் கிரா.்.ப்ட் - **18 (Bich Kraft – 18**விமானங்கள்)

159. DEM என்றால் என்ன?
எண்ணிலக்க தரையுயர மாதிரிகள்

160. DTM என்றால் என்ன?
எண்ணிலக்க தரையமைப்பு மாதிரிகள்

161. குவாரி (Quvary) பகுப்பாய்வு முறையைக் கொண்டுள்ள நவீன படவரைகலையியல் முறைமை யாது?
**GIS**

A.Kajan A.Kajan A.Kajan

**162. தரவுகள் தகவலாக மாற்றமடையும் செயன்முறையின் சரியான ஒழுங்கு**
விவகாரங்கள் - தரவுகள் - உள்ளீடு – செயன்முறை – வெளியீடு – தகவல்

**163. தரவுகளின் வகைகள் எவை?**
* இடம்சார் தரவுகள்
* இடம்சாராத தரவுகள்

**164. இடம்சார் தரவு பெறப்படும் முறைகள் யாவை?**
* கள ஆய்வு **(Field Reserch)**
* தொலையுணர்வுத் தொழில்நுட்பம் **(RS)**

**165. புவி மேற்பரப்பிலுள்ள தகவல்களை GIS இல் எத்தகைய வடிவங்களில் அமைக்க முடியும்?**
* புள்ளிகள் **(Points)**
* கோடுகள் **(Lines)**
* மூடிய உருவங்கள் **(Polygon)**

**166. தற்காலத்தில் அதிகளவில் பயன்படுத்தப்படும் இரண்டாம்நிலைத் தரவு மூலம் எது?**
கணனி

**167. புவித்தகவல் தொகுதியில் தகவல் சேமிப்பதற்கு பிரதானமாக பயன்படுத்தப்படுபவை யாவை?**
* செய்மதி
* கணனிகள்

**168. GPS செய்மதி இரண்டுக்கு இடையிலான இடைவெளி எத்தனை பாகைகளாகும்?**
**$55^{o}$**

**169. வானவெளியில் கிடையான போக்கில் ஒரு செய்மதி நிலைத்து நிற்கும் காலப்பகுதி எவ்வளவு?**
**05** மணித்தியாலங்கள்

**170. சோவியத் யூனியனின் "கால் - 007" என்ற விமானத்தை GPS ஐ பயன்படுத்தி அமெரிக்கா சுட்டுவீழ்த்திய ஆண்டு யாது?**
**1983**

**171. முதல் சோதனையாக 'பிளாக் - 1" எனும் GPS செய்மதி ஏவப்பட்ட ஆண்டு எது?**
**1978**

**172. புவியியல் தகவல் ஒழுங்கு (GIS) இன் பகுப்பாய்வு படிமுறைகளில் (மாதிரிகள்) பிரதானமானவை யாவை?**
* மேற்படிவாக்கப் பகுப்பாய்வு
* வலயப் பகுப்பாய்வு
* வலைப்பின்னல் பகுப்பாய்வு
* அண்மை அயலவர் பகுப்பாய்வு

**173. தொலையுணர்வுத் தரவுகளை விவரிக்கின்ற பிரதான முறைகளாவன.**
* கட்புல ரீதியான விவரணம்
* எண்சார் விவரணம்

A.Kajan A.Kajan A.Kajan





**174. தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் (RS) தரையை அடிப்படையாகக் கொண்ட மேடை எத்தனை மீற்றர் உயரத்தில் அமைக்கப்படும்?**
**50m**

**175. செய்முறைப் புவியியலின் முனைப்பான விடயம் யாது?**
காலம், இடம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிலத்தோற்றத்தினது பௌதிக மற்றும் மானிட ரீதியன தோற்றப்பாடுகளை முன்வைப்பதாகும்

**176. தரவுகளை களஞ்சியப்படுத்தி வைக்க உதவும் நவீன ஊடகம் எது?**
இறுவட்டு **(CD)**

**177. வானிலை, காலநிலைத் தரவுகளை சேகரிக்கப் பயன்படுத்தும் ஆய்வு நுட்பம் எது?**
அளவை

**178. "மாதிரி" என்றால் என்ன?**
குடி பெரியளவினதாக இருக்கும் போது தரவு சேகரிப்பதற்கு தெரிவு செய்யப்படும் குடிகளின் அளவு

**179. புள்ளிவிவரவியலில் ஒகிவ் (Ogive) வளையி மூலம் காட்டப்படுவது எதனையாகும்?**
சதவீத திரள்மீடிறன்கள்

**180. 1:50000 என்ற அளவுத்திட்டத்தின்படி வரையப்படும் தேசப்படத்தில் 2Cm தூரமானது உண்மையான நிலப்பரப்பில் எடுத்துரைக்கப்படும் தூரத்தின் அளவு யாது?**
**1Km**

**181. தெரிவுசெய்யப்பட்ட மாறிகளின் பெறுமானம் மாற்றமடையும் முறையினைக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான முறை யாது?**
விலகல் கோட்டு வரைபடம்

**182. இலங்கையில் 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கவியல் படங்களை தயாரிக்கும் திணைக்களம் எது?**
இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**183. GIS இன் பயன்பாடாவது.**
குறுகிய காலத்துள் சரியான தகவல்களை ஒப்பிடுதல், பகுப்பாய்வு செய்தல், காட்சிப்படுத்தல்

**184. இடவிளக்கப்படம் ஒன்றிலுள்ள வடிகால் அம்சங்கள், வடிகால் பாங்குகளைக் குறிப்பிடுக.**

**வடிகால் அம்சம்**
ஆற்றுத் தொகுதி, நீரேந்து பகுதி, நீர்ப்பிரிநிலம், பிரதான ஆறு, கிளையாறு, நீர்வீழ்ச்சி, மியாந்தர், பின்னிய ஆறு, சதுப்புநிலம்

**வடிகால் பாங்கு**
ஆரை வடிகால், மரநிகர் வடிகால், சட்டத்தட்டு வடிகால், கங்கண வடிகால்

**185. 1:50000 என்ற மெட்ரிக் அளவுத்திட்டத்தில் 1Cm அளவு நிலத்தில் காட்டப்படும் Cm கள் எவ்வளவு?**
**50000 Cm**

A.Kajan A.Kajan

**186. இலங்கை மெட்ரிக் இடவிளக்கவியற் படங்களில் அளியடைப்புக்கோடு வரைந்து காட்டப்பட்டிருப்பது எந்த இடத்தை மையமாகக்கொண்டாகும்?**
பேதுறுதாலகால மலையை மையமாகக் கொண்டு

**187. இலங்கை முழுவதையும் எட்டு துண்டுகளாக படமாக்கிய செய்மதி எது?**
லான்ட்ஷாட்

**188. இலங்கையின் மாகாண ரீதியான சமூக, பொருளாதார ஆய்வினை மேற்கொள்ள பொருத்தமான தரவு சேகரிப்பு முறை யாது?**
மாதிரியெடுப்பு

**189. குடியிருப்பு, கால்வாய், நகரம், நிலப்பயன்பாடு முதலான இடம்சார் அம்சங்களை GIS இன் காவித்தரவு மாதிரியில் தோற்றமளிக்குமாற்றை முறையே தருக.**
புள்ளி, கோடு, புள்ளி, பல்கோணி

**190. நிறை, உயரம், வளர்ச்சி போன்ற புள்ளிவிபர மாதிரிகளைக் கொண்ட தரவு வகை யாது?**
தொடர்ச்சியான தரவு

**191. எண்கணித தொகுதி ஒன்றினுடைய எண்கணித சராசரியிலிருந்து அவ் எண் தொகுதியின் ஒவ்வாரு பெறுமானமும் வேறுபட்டு அமைவது எவ்வாறு அழைக்கப்படும்?**
விலகல்

**192. கொழும்பு மாவட்டத்தின் 2019ஆம் ஆண்டிற்கான மழைவீழ்ச்சி, வெப்பநிலைத் தரவகளைக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான வரைபடம் எது?**
கோட்டுநிரல் வரைபடம்

**193.** $\sigma^2 = \frac{\sum(x - \bar{x})^2}{n}$ **எனும் சூத்திரம் மூலம் கணிக்கப்படும் புள்ளிவிபரவியல் நுட்பம்**
மாறற்றிறன்

**194. தரவு சேகரித்தல் முறையில் வினாக்கொத்து மூலம் தரவு சேகரிக்கும்போது அதிலுள்ள வினாக்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**
ஆய்வின் நோக்கத்திற்கு ஏற்ப இருத்தல் வேண்டும்

**195. சாதாரண தேசப்படத்திலிருந்து GIS படம் கொண்டுள்ள சிறப்பான பண்பு யாது?**
இடம், பண்புசார் தகவல்களைக் காண்பித்தல்

**196. ஒரு குறித்த பிரதேசத்திலுள்ள குடிமக்களை குழுக்களாக்கி அவற்றிலிருந்து மாதிரிகளைத் தெரிவு செய்வது எவ்வாறு அழைக்கப்படும்?**
கொத்து மாதிரி


**197. தேசப்படம் ஒன்றின் பிரதான அடிப்படை அம்சங்களாக கொள்ளப்படுபவை எவை?**
* அமைவிடம்
* அளவுத்திட்டம்
* திசை
* வழக்கக்குறியீடுகள்

**198. இடவிளக்கவியற் படம் என்பது யாது?**
ஓர் அளவுத்திட்டத்தில் நிறங்கள், குறியீடுகள், இலக்கங்கள், எழுத்துக்கள் என்பவற்றைப் பயன்படுத்தி, புவி மேற்பரப்பிலுள்ள பௌதிக, பண்பாட்டு அம்சங்களைக் காட்டுவது.



A.Kajan A.Kajan A.Kajan

**199. உயரம் குறைந்த பகுதியில் சமவுயரக்கோடுகள் நெருக்கமாகவும், உயரம் கூடிய பகுதியில் ஐதாகவும் காணப்படும் சாய்வு வகை யாது?**
குவிவுச் சாய்வு



**200. இரண்டு மலைகளுக்கு இடையிலான தாழ்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?**
பள்ளத்தாக்கு, தாழ்கணவாய்

**201. புவிக்கோளத்தின் வடமுனைவு அமைந்துள்ள வடக்கு எது?**
உண்மை வடக்கு

**202. ஓரங்குல அளவுத்திட்டங்களைப் பயன்படுத்தி தேசப்படங்களை அமைக்கும் நுட்பத்தை முதன்முதலில் பயன்படுத்திய நாடு எது?**
பிரித்தானியா

**203. ஒரு குன்றின் உச்சியிலிருந்து எல்லாத் திசைகளிலும் ஆறுகள் கீழிறங்குமாயின் அத்தகைய வடிகால் அம்சத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?**
ஆரை வடிகால்

**204. இரு மலையுச்சிகளுக்கு இடைப்பட்ட ஒடுங்கிய தாழ் பிரதேசம் எவ்வாறு அழைக்கப்படும்?**
உயர்கணவாய்

**205. இரு மலைகளுக்கு இடைப்பட்ட ஒடுங்கிய தாழ் பிரதேசம் எவ்வாறு அழைக்கப்படும்?**
தாழ் கணவாய்

**206. பல ஆண்டுகளுக்குரிய பல வகைகளை ஒரு படத்திலே வரைந்துகொள்வதற்குப் பொருத்தமான வரைபடம் யாது?**
கோட்டுநிரல் வரைபடம்

**207. தேசப்படங்களின் அமைவிடம் காட்டப்பட்டிருப்பது எவற்றின் அடிப்படையிலாகும்?**
அகலாங்கு – நெட்டாங்குகள்

**208. 1:75000 என்ற அளவுத்திட்டத்தை நேர்கோட்டு அளவுத்திட்டமாக காட்டத் தேவையான Cmகள் எவ்வளவு?**
**1.33Cm**

**209. 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் 10Cm நீளம், 8Cm அகலம் கொண்ட படப்பிரதேசத்தின் பரப்பளவு யாது?**
**$20Km^2$**


**210. ஒரு விடயத்தை சிறப்பாக எடுத்துக்காட்ட தயாரிக்கப்படும் படங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**
கருப்பொருள் படங்கள்

**211. விமான ஒளிப்படங்களைப் பயன்படுத்தி புவியினைப் படமாக்கும் தொழில்நுட்பம் வளர்சி பெற்றது எப்போது?**
**1**ஆம் உலகப்போரின் பின்னர்

**212. உயர் துல்லியத்தன்மை கொண்ட GPS சைகை வாங்கி எது?**
நிலஅளவை **GPS**

A.Kajan A.Kajan A.Kajan

**213. அருகில் காட்டப்பட்டுள்ள படத்தில் GIS இன் தரவுப் பகுப்பாய்வு முறையொன்று காட்டப்பட்டுள்ளது. அம் முறையாவது.**
அண்மைய அயலவர் பகுப்பாய்வு



**214. 'ஒப்பீட்டு அளவுத்திட்டம்'' என்றால் என்ன?**
ஓரங்குல, மெட்ரிக் அளவுத்திட்டங்களை ஒப்பிடுதல்

**215. 1569இல் அகல – நெடுங்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு தேசப்படத்தை அமைத்தவர் யார்?**
ஜோர்கடஸ் மேற்கற்றோ

**216. இலங்கையில் மெற்றிக் தேசப்படங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது எந்த ஆண்டிலாகும்?**
**1970**

**217. உலகில் யுத்தப் படங்களை தயாரிக்கும் சேவை ஆரம்பிக்கப்பட்டது எந்த ஆண்டிலாகும்?**
**1942**

**218. தேசப்படம் ஒன்றில் பட முகப்பில் காணப்படும் விடயங்கள் எவை?**
* தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசம்
* நிறம்
* குறியீடு
* இருபரிமாணத்தன்மை
* இடத்தின் பெயர்

**219. கணிதத் துறை மாதிரியாக்கம் அளவறியும் முறையிலான பகுப்பாய்விற்கு உதவும் GIS வடிவம்.**
நெய்யரி / பரவல் தரவு

**220. தேசப்படங்களுள் மத்திய அளவுத்திட்டத் தேசப்படம் எனப்படுவது.**
**1:50000** மெற்றிக் தேசப்படம்

**221. 1:50000 மெற்றிக் அளவுப் படத்தில் 2Cm இனால் குறித்துக்காட்டப்படும் Km யாது?**
**1Km**


**222. இலங்கையின் நீளம் கணிப்பிடப்படுவது எவ்வெவ் இடங்களுக்கிடையிலாகும்?**
பருத்தித்துறை – தெய்வேந்திரா முனை **(432Km)**

**223. இலங்கையின் அகலம் கணிப்பிடப்படுவது எவ்வெவ் இடங்களுக்கிடையிலாகும்?**
கொழும்பு – சங்கமன்கந்தை **(224Km)**

**224. இலங்கையின் 1:50000 எனும் அளவுத்திட்டத்தில் முதலாவது படம் அமைந்துள்ள பிரதேசம் எது?**
மானிப்பாய்

**225. 1:50000 எனும் இடவிளக்கப் படங்களில் சமவுயரக்கோடுகள் மூலம் காட்டப்படுவது எதனையாகும்?**
தரையுயர்ச்சி வேற்றுமை

A.Kajan A.Kajan A.Kajan



226. **தேசப்படமொன்றில் காணப்படும் திசைகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை யாது?**
**16**

227. ▲ **இக் குறியீட்டினால் காட்டப்படுவது எதனையாகும்?**
திரிகோணகணித நிலையம்

228. **திரிகோணகணித நிலையம் ஒன்றினால் புலப்படுத்தப்படுவது எதனையாகும்?**
கூடிய உயரம்

229. **தாதுகோபம் அல்லது கூம்பின் வடிவில் அமைந்த பௌதிக நிலவுறுப்பு எது?**
கூம்புக்குன்று

230. **இலங்கையிலுள்ள ஆற்றுத்தொகுதிகளின் எண்ணிக்கை யாது?**
**103**

231. **இலங்கையிலுள்ள பிரதான ஆற்றுத்தொகுதிகளின் எண்ணிக்கை யாது?**
**34**

232. **அளியடைப்பு வடிகால் பாங்கை வேறு எவ்வாறு அழைப்பர்?**
சட்டத்தட்டு வடிகால்

233. **மலைத்தொடர்கள் சமாந்தரமாகச் செல்லும் கடற்பகுதியின் கரையோரம் எவ்வாறு அழைக்கப்படும்?**
ஒத்தகரை

234. **கடற் பிரதேசத்தில் நீலநிறக் கோடுகளால் காட்டப்பட்டிருப்பது எதனையாகும்?**
சமவாழக்கோடு

235. **புள்ளிவிவரவியலில் X, Y அச்சின் கோடுகள் சந்திக்கும் புள்ளியின் பெறுமதி யாது?**
**0**


236. **1:50000 இடவிளக்கவியல் படத்தின் அளவிடையும், திசையும் பற்றி தகவல்கள் காட்டப்பட்டிருப்பது.**
வெளி எல்லையின் கீழ் ஓரம்

237. **இலங்கை 1:50000 மெட்ரிக் இடவிளக்கவியல் படத்தின் அடிப்படையில் 92ஆவது பிரிவாக உள்ளடக்கப்பட்டுள்ள பிரதேசம் எது?**
தங்காலை

238. **உலகின் தேசப்பட உருவாக்கத்திற்கு ஆரம்பகர்த்தாக்களாக காணப்பட்ட பழைய தத்துவ விஞ்ஞானிகள் யாவர்?**
* அனெக்சி மெண்டர் (கி.மு **547)**
* இரடோஸ்தினிஸ் (கி.மு **276 – 195**)
* ஹெரடோரஸ் (கி.மு **485 – 425)**
* குளோடியஸ் தொலமி (கி.மு **160 – 90)**
* ஸ்ட்ரோபோ (கி.மு **64 – 200)**

239. **1:50000 மெட்ரிக் இடவிளக்கவியல் படங்களில் பயன்படுத்தப்படும் திசை.**
அளியடைப்பு வடக்கு

A.Kajan A.Kajan



240. **போக்குவரத்துப் படத்தின் பிரதான பிரிவுகள் யாவை?**
* தரை மார்க்கப் போக்குவரத்துப் படம்
* கடல் மார்க்கப் போக்குவரத்துப் படம்
* ஆகாய மார்க்கப் போக்குவரத்துப் படம்

241. **நிலப்பயன்பாட்டுப் படத்தின் பிரதான இரு பிரிவுகளும் எவை?**
* குறியீடுகளால் மாத்திரம் காட்டப்படும் நிலப் பயன்பாட்டுப் படம்
* நிறங்களை மட்டும் பயன்படுத்தும் நிலப் பயன்பாட்டுப் படம்

242. **48Cm2 உடைய ஒரு பிரதேசத்தின் பரப்பளவு யாது?**
**12Km2**

243. **M.N என்ற குறியீட்டின் முலம் கருதப்படும் திசை யாது?**
காந்த வடக்கு **(Magnatic North)**

244. **G.N என்ற குறியீட்டின் முலம் கருதப்படும் திசை யாது?**
அளியடைப்பு வடக்கு

245. **விண்வெளி மேடைகளில் பயன்படுத்தப்படும் ராக்கெட், செய்மதிகள் பறக்கும் உயரத்தின் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தலாம்?**
* விண்வெளிக் கலம்
* விண்வெளி நிலையம்
* தாழ் உயரத்திலுள்ள செய்மதி
* மிக உயரத்திலுள்ள செய்மதி

246. **கடலோரத்தில் கடலை நோக்கிப் புடைத்துச் செல்லும் நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?**
முனை

247. **1:50000 மெட்ரிக் இடவிளக்கவியல் படங்களின் உள் எல்லைக் கோடுகளில் காட்டப்படும் தகவல்கள்.**
* சர்வதேச ஆள்கூறுகளான அகல – நெடுங்கோட்டுப் பெறுமானம்
* தேசிய அளியடைப்பு ஆள்கூறுகளின் பெறுமானம்
* வீதிகளின் முடிவிடங்களின் எல்லைக் கோட்டிலிருந்து அவற்றுக்கான தூரம்

248. **1:50000 இடவிளக்கவியல் படங்களின் குறியீட்டு விளக்கம் எத்தனை தலைப்புக்களில் காட்டப்படும்?**
**8**

249. **செய்மதிகள் தாம் பயணம் செய்யும் சுற்றுவட்டத் தளம், மற்றும் அமைவிடத்தினைப் பொறுத்து எவ்வாறு வகைப்படுகின்றது?**
புவிச்சுற்றுச் செய்மதி, முனைவுச் சுற்றுச் செய்மதி

250. **கடல் அலைகள், ஆறு என்பவற்றால் கொண்டுவரப்படும் மணல் கரையோரமாக நீண்டு கிடக்கும் பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?**
மணற்தரை / மணற்தொடர்

A.Kajan A.Kajan A.Kajan

உங்கள் தேடலுக்கு....
Group தமிழ்வழி
Group Page e.way
கல்வியால் உலகாள்வோம்